திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலே சிறுவர் பேருந்துகளை விட்டதைப்போல, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களிலே, அங்கும் பக்கத்திலேயிருக்கிற சிறுவர்கள் வருவதற்கு பேருந்துகள் விட தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னையைப்போன்ற நெரிசல் நேரங்கள் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் ஏற்பட வில்லை. ஆகையினால் இந்தப் பிரச்சினை இன்னும் அங்கு எழ வில்லை.

பேராசிரியர்கள் சம்பள விகிதம்

* 43 *வினு—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசு கல்லூரிகளில் ஆங்கில, தமிழ் பேராசிரியர்களுக்கு சம்பள விகிதம் ஒரே அளவுக்கு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether the scales of pay paid to the Professors and Lectures in Tamil and English are also paid to the Professors and Lecturers in minority languages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, எல்லா மொழியைச் சேர்ந்த பேராசிரியர்களுக்கும் ஒரே விகிதமான சம்பளம்தான் தரப்படுகிறது.

மாயூரம் ஒன்றியப் பகுதியில் உயர்நிலைப்பள்ளிகள்

* 44 *வினு—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ஜனத் தொகைக்கு போதுமான உயர்நிலைப் பள்ளிகள் தற்போது திறக்கப் பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

1973 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த பகுதியில் தற்போதுள்ள ஜனத்தொகை விகிதாசாரப்படி போதுமான அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகள் இல்லையென்று அங்கு கூறப்படுகிறது. எனவே, அதை மீண்டும் பரிசீலித்து அத்தகைய உயர்நிலைப்பள்ளி மேலும் ஒன்றினை அந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஏற்படுத்த அரசு ஆவன செய்ய, உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 4 பெரிய பள்ளிகள் இருக்கின்றன. அரசு உயர்நிலைப்பள்ளி, மணல்மேடு—1,173 மாணவர்கள் ; உமர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருச்சிற்றம்பலம்—54 மாணவர்கள் ; திரு. குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, தர்மபுரம்—153 மாணவர்கள் ; அரசு உயர்நிலைப் பள்ளி திருமங்கலம்—191 மாணவர்கள். மணல்மேட்டிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியைத் தவிர மற்ற மூன்றிலும் போதுமான அளவுக்கு இடங்கள் இருக்கின்றன. இந்த இடங்கள் எல்லாம் நிரம்பிய தற்குப் பிறகு, மாணவர்களைச் சேர்ப்பதற்கு நெருக்கடி ஏற்படு மானால் உறுப்பினர் சொல்வதைக் கவனிக்கலாம். இப்பொழுது போதுமான அளவுக்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

மின் வெட்டினால் தொழில், வேளாண்மை, வீட்டுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து ஒத்தி வைப்பு தீர்மானங்கள். திரு. கே. டி. கே. தங்கமணி, திருமதி த. ந. அனந்தநாயகி, டாக்டர் ஹாண்டே, திரு. பொன்னப்ப